MAY 2024 **P/ID 35323/PTL3N**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்கட்டு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. ஐம்பால் எவை?

2. சுட்டுப் பெயர்கள் இரண்டினை எழுதுக.

3. வண்ணச்சினைச் சொல்லின் அமைப்பைச் சுட்டுக.

4. விரவுப் பெயர்கள் மூன்றினை எழுதுக.

5. விளி எத்தனையாவது வேற்றுமை?

6. கிழமைப் பொருள் வேற்றுமை யாது?

7. எழுவாய் எத்தனையாவது வேற்றுமை?

8. ஏழாம் வேற்றுமை உருபுகள் யாவை?

9. 'என்னோடு பேசு' என்பது எத்தனையாவது வேற்றுமை?

10. பிண்டப்பெயர்-பொருள் கூறுக.

11. கொடையெதிர் கிளவி என்பது யாது?

12. முறைப்பெயர்கள் இரண்டினை எழுதுக.

பகுதி ஆ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே
250 சொற்களில் விடையெழுதுக.

13. ‘எழுவாயும் பயனிலையும் ஒத்து இயங்கவேண்டும்’ – விளக்குக.

14. செப்பும் வினாவும் வழாது ஓம்பலை வலியுறுத்துக.

15. இயற்கை மற்றும் செயற்கைப் பொருளைக் கூறும் முறையை விளக்குக.

16. ‘எடுத்தமொழி, இனம் செப்பலும் உரித்தே’ - விளக்குக.

17. தடுமாறு தொழிற்பெயர் குறித்து எழுதுக.

18. ஓம்படைக் கிளவி பற்றி விளக்குக.

19. ஆயெட்டு என்ப தொழில் முதனிலையே-கருத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே
500 சொற்களில் விடையெதுக.

20. திணை, பால், இடம் குறித்து விளக்குக.

21. இரண்டாம் வேற்றுமை குறித்து விவரி.

22. புள்ளி ஈறுகள் எங்ஙனம் விளியேற்கும்? – ஆய்க.

23. உயர்திணைப் பெயர்களை விளக்குக.

24. விரவுப் பெயர்களை அறிமுகம் செய்க.

———————